மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமத்தின் தொடர்புடனான இனக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்கு உரித்தான 11,893.55 ஹெக்ரேயர் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் கீழ் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன்,	மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்காக பெருந்தொகை பணம் ஒன்று செலவாவதுடன் தற்போது காணிகள் குத்தகைக்கு வழங்கப்படும் போது வருடாந்த குத்தகை வாடகைக்காக	காணிகளை மதிப்பீடு செய்து ஆதனங்கள் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் அடையாளம் படுத்தப்பட வேண்டும்.

	ஹெக்ரேயர் 2,172.09 காணி அளவொன்று உள்ளூர் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டு, இருப்பை உறுதிப்படுத்தி கணக்கிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	மாத்திரம் மதிப்பீட்டை பெற்றுக் கொள்ளப்படும். அதற்காக செலவாகும் செலவையும் குத்தகைதாரிடம் இருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	
(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 பந்தி பிரகாரம் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலத்தை குறைந்த பட்சம் ஒவ்வொறு நிதி ஆண்டின் போதும் மீளாய்வு செய்து எதிர்பார்க்கப்படும் பெறுமதிகள் முந்தைய ஆண்டிலிருந்து வேறுபட்டால், இலங்கை கணக்கீட்டு நியமம் 08 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு இறுதிவரை தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக பெறுமான தேய்வு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 378,088,511 தொகை ஆதன பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண கிரயம் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த சொத்துக்களின் எஞ்சிய மற்றும் பயனுள்ள ஆயுட்காலத்தை மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்த குழுவிற்காக மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டு நியமிப்பதற்காக பெறுகை பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த பணிகள் மேற்கொள்ளப்படுவதற்காக குறிப்பிடத்தக்க காலம் ஒன்று தேவைப்படுவதுடன் இந்த செயற்பாடு மேற்கொள்ளப்பட்டதுடன் குறித்த மதிப்பீட்டுப் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டு வரப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	சபையில் 1783 பதவியணியயினர்கள் பணியமர்த்தியிருந்தாலும், இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 57 பந்தியின் பிரகாரம் சேவை நலனகள் கடப்பாடு கணிப்பிடும் போது இயற்கணிய முறையை பயன்படுத்தி கணித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் பணிக்கொடை கணிப்பீடு மேற்கொள்வது முன்னில் இருந்து 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழில் திணைக்களத்தினால் நிலுவை பணிக்கொடை செலுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இந்த சட்டத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இயற்கணிய முறையை பயன்படுத்தி சேவை நலன்கள் கணப்பீடு செய்யப்பட வேண்டும்.

(ஈ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள 123,925.91 ஹெக்ரேயர் காணிகள் சாதாரண பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டு முதலீட்டு சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.	பிரதேச தோட்ட கம்பெனிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பான தகவல்கள் 2024 ஆம் வருடத்தின் நிதி குறிப்பினுள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய தரப்பினர் தொடர்பாக குத்தகை வழங்கப்பட்டுள்ள மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு உரிய இடங்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்படவில்லை என்பதுடன் அவ்வாறு மதிப்பீட்டு தொகைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் கணக்குகளில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணி கட்டிடங்கள் முதலீட்டு சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 12 மற்றும் 30 பந்திகளின் பிரகாரம், உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் சாதாரண பெறுமதிக்கு அளவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 21,938,031 ஆன நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் நிலையான பெறுமதி ஒன்றாக முன் கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது ரூபா 29,225,917 ஆன உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு வருமானத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் உரிய கிரயம், சொத்துக்களில் இருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை.	2022, 2023 மற்றும் 2024 ஆகிய வருடங்களின் பலகை மதிப்பீட்டு அறிக்கை வன வளங்கள் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருப்ப துடன், அவ்வாறு வனவளங்கள் பிரிவினால் பெற்றுத் தரப்பட்ட பலகை பெறுமதிகள் மற்றும் மரங்களின் அளவுகள் தொடர்பான உரிய தோட்டங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நிறுவனத்தினுள் செயற்பாட்டு ரீதியான பிரச்சினைகள் உருவாகியுள்ளன. .அதனால் எதிர்காலத்தில் சரியான பெறுமதிகளை புத்தகங்களில் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட வேண்டியதுடன் மேலும் விற்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கிரயம் அந்தச் சொத்துக்களிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

(ஊ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 30 மற்றும் 55 ஆம் பந்தியின் பிரகாரம் 1996 ஆம் வருடத்தில் இருந்து முதிர்வடைந்துள்ள ஏனைய பயிரிடுதலின் கீழ் கட்டப்பட்டிருந்த ரூபா 8,281,946 ஆன உயிரியல் விஞ்ஞான் சொத்துக்கள் (Bearer Plants) தொடர்பில் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	சொத்துக்களின் பௌதிக இருப்பை உரிய தோட்டங்களில் இருந்து உறுதியை பெற்றுக் கொண்டு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் இருப்பு உறுதிசெய்யப்பட்டு, தேய்மானம் செய்யப்பட வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	முன்னைய வருடங்களில் இருந்து தொடர்ந்து காணப்பட்டுவரும், ரூபா 3,350,076 ஆன, சிறு ஏற்றுமதிப் பயிர்கள், கினிசிரியா பயிர்செய்கை மற்றும் 08 தோட்டங்களில் இருந்ததுமான, ரூபா 5,041,141 முதிர்ச்சி யடையாத பிற உயிரியல் சொத்துக்கள், பௌதீகரீதியான இருப்பு ஏதுமின்றி, நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	இந்த சிறு ஏற்றுமதி பயிர்களின் பௌதீக இருப்பு தொடர்பாக தோட்ட அதிகாரினால் உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் அந்த உறுதிப்பாட்டை பெற்றுக் கொண்டதன் பின்னர் புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கு அல்லது உரிய நடைமுறைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	சொத்துக்களின் பௌதீக ரீதியான இருப்பு உறுதிசெய்யப்பட்டு, தேவையான சீராக்கங்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	20 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து வரும் நடை முறையல்லா சொத்துக்களாக கணக்கிடப்பட்டிருந்த ரூபா 571,318 வான ஹன்தான தோட்டத்தின் விளையாட்டு மைதானம், டார்லி வீதியில் அமைந்துள்ள களஞ்சிய அலுவலகம் மற்றும் நுகர்வு பிரிவுக்குரிய கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்படாமல் நிதிக் கூற்றுக்களினுள் காட்டப்பட்டிருந்தது.	நிறுவனத்தில் தொடர்ந்து காணப்படுகின்ற செயற்பாட்டு மூலதன சிக்கல்கள் காரணமாக 2002 ஆம் வருடத்திலிருந்து 2023 ஜூன் 30 ஆம் திகதி வரை சட்டபூர்வமான கொடுப்பனவுகளை கூட மேற்கொள்ள முடியாத நிலையில் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நிறுவனத்திடம் போதுமான அளவு நிதி காணப்படவில்லை. அதனால் இந்த நிலையான சொத்துக்களின் பழைய பெறுமதிகள் அவ்வாறே புத்தகங்களில்	சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட வேண்டும்.

		காணப்படுவதுடன் எதிர்காலத்தில் இந்த கட்டிடங்கள் மதிப்பிடப்பட்டு நிதி கூற்றுக்களினுள் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	
(இ)	மொன்த கிறிஸ்தோ தோட்டத்தின் ரூபா 32,168,955 ஆன ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் உயிரியல் சொத்துக்களும், திரண்ட பெறுமதி ரூபா 10,260,406 ஆன ஓனுகள் ஓய தோட்டத்திற்கு உரிய நிலையான சொத்துக்கள் மற்றும் ஹரங்கல மற்றும் டைஸ்பேன் தோட்டத்தின் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் சொத்துக்கள் உரித்தாக்கியதன் பின்னர் பரீசீலிப்புக்குட் படுத்தப்படாமையால் இந்த சொத்துக்களின் இருப்பை உருதிப்படுத்த சபை தவறியிருந்தது. அதனால் இந்த சொத்துக்கள் பெறுமானத் தேய்வு மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	மொன்த கிறிஸ்தோ தோட்டத்தின் சொத்துக்களுக்கு உரிய ஆவணங்கள் இல்லாததன் காரணமாக இந்த சொத்துக்களுக்கு தேய்மானம் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் இதுவரை இந்த சொத்துக்களின் இருப்பு தொடர்பாக உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்வதற்கும் முடியாது போயிருந்தது. மேலும் ஓனுகள் ஓய தோட்ட மகாவலி செயல் திட்டத்தின் காரணமாக மூழ்கடிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அதற்குரிய நிலையான சொத்துக்களும் பௌதீக இருப்பன்றும் காணப்படவில்லை. ஹரங்கல தோட்டம், அதன் தொழிற்சாலையுடன் தற்போது மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் ஊடாக குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பதுடன், ஆவணங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு உரிய விபரமான தகவல்களை தேடிக் கொள்வதற்கு முடியாது போய் உள்ளது.	சொத்துக்களின் பௌதீக ரீதியான இருப்பு உறுதிசெய்யப்பட்டு, தேய்மானம் செய்யப்பட வேண்டும்.
(ஈ)	நாகஸ்தென்ன தோட்டத்தின் “தோட்ட உரிமையாளர்களின் பங்களா” என்ற கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டு மீளாய்வாண்டினுள் ஏற்பட்ட ரூபா 1,468,199 தேறிய நட்டம், இலாப நட்ட கணக்குக்கு சீர் செய்யப்படாமல் பல்வேறு கடன்	இது 2025 டிசம்பர் 31 ஆம் திகதி சீர் செய்யப்பட்டுள்ளது.	கணக்கீட்டுக் கொள்கைகளுக்கமைய கணக்குகள் சீர் செய்யப்பட வேண்டும்.

	பட்டோர் மீதிகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.		
(உ)	பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் ஊடாக செயல்படுத்தப்பட்டிருந்த “தோட்ட அபிவிருத்தி செயல்திட்டம்” 2010 ஆம் வருடத்தின் போது நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த செயல் திட்டத்திற்குரிய கூரை தகடுகளை கொள்வனவு செய்வதற்காக சபையினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 4,136,733 சபையின் நிதி கூற்றினுள் ஏனைய கிடைக்கப்பெற வேண்டிய மீதி ஒன்றாக 14 வருட காலங்களுக்கு அதிக காலத்திலிருந்து முன் கொண்டு வரப்பட்டிருந்தது. அந்த மீதியை மீள் நிரப்பப்பட வேண்டியது எந்த நிறுவனத்தின் மூலம் என்பதை அடையாளப்படுத்தி இருக்கவில்லை என்பதுடன் அறவிடுதல் நிச்சயமற்ற தன்மையாக காணப்பட்டதோடு அதற்காக எவ்வித ஏற்பாடு ஒன்றும் நிதி கூற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இந்த செயற் திட்டம் 2010 ஆம் வருடத்தில் நிறைவடைந்திருந்ததுடன் இந்த நிறுவனம் தற்பொழுது செயல்படுத்தப்படுவதில்லை என்பதுடன் அந்த பணத்தை மீண்டும் அறிவிட்டுக் கொள்வதற்கு வல்லமை காணப்படவில்லை. 2026 ஆம் வருடத்தில் இந்த பழைய மீதியை பனிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கணக்குகளில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	கிடைக்கப்பெற வேண்டிய மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் நிச்சயமற்ற தன்மையில் காணப்படுகின்ற மீதிகள் தொடர்பாக ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஊ)	ஹன்தான தோட்டத் தொகுதிக்கு சொந்தமான 01 ஏக்கர் 1.3 பர்சஸ் நிலத்தில் அமைந்துள்ள தொழிற்சாலை மற்றும் காணி 2001 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து 30 வருடங்களுக்காக இலங்கை தேயிலை சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் இருந்து இதுவரை 23 வருட காலங்களில் அறவிடப்பட வேண்டிய ரூபா 46,314,100 குத்தகை வாடகை அறவிடப்படாதிருந்தருடன் அந்தக் கிடைக்கப்பெற வேண்டிய குத்தகை வாடகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவும் வில்லை.	உரிய தகவல்களை காணிப் பிரிவிலிருந்து பெற்றுக் கொண்டு எதிர்காலத்தில் கணக்கீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.	ஒப்பந்தத்தின் பிரகாரம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய குத்தகை பணத்தை அறவிட்டு கணக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

(எ)	சபையின் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் தொடர்பாக முதிர்ச்சி அடையாத இறப்பர் பயிர் செய்கைக்காக 2003-2014 காலங்களினுள் செலவு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 29,599,058 தொகை 7 வருடங்களின் பின்னர் முதிர்ச்சி அடைந்த இறப்பர் பயிர் செய்கைக்கு மாற்றப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 10 வருடங்களை விஞ்சிய அதிக காலம் கடந்திருந்த போதிலும் முதிர்ச்சி அடைந்த பயிர் செய்கைக்கு மாற்றம் செய்து பெறுமானத் தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இந்த முதிர்ச்சி அடையாத இறப்பர் பயிர் செய்கையின் ஊடாக 2025 ஆம் வருடத்திலே முதிர்ச்சி அடைந்த பயிர் செய்கைக்கு ரூபா 13,230,467 மாற்றப்பட்டுள்ளதுடன் பௌதீக ரீதியாக காணப்படாத அளவு ரூபா 1,043,256 ஆகும்.	முதிர்வடைந்த கால எல்லையினுள் முதிர்ச்சி அடைந்த பயிர் செய்கைக்கு மாற்றுவதற்கும் பௌதீக ரீதியாக காணப்படாத பயிர் செய்கை முறையான நடைமுறையில் கணக்குகளில் இருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஏ)	11 தோட்டங்களுக்குரிய ரூபா 2,761,476 தேயிலை இருப்பு மற்றும் தேயிலை கன்றுகளின் இருப்பு பௌதீக ரீதியாக காணப்படாத போதிலும் இருப்பினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது.	இந்த தேயிலை இருப்பு மற்றும் தேயிலை கன்றுகளின் இருப்பு காணப்படவில்லை என்பதாக உள்ளக கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பௌதிக ரீதியாக காணப்படாத இருப்புக்களை கணக்குகளில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஐ)	சபையின் நிதிக் கூற்றுக்களில் ஏனைய உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் கிரயம் ரூபா 17,925,652 ஆக காணப்பட்ட போதிலும் கிரயத்ததை விஞ்சி பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக, மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட தேய்மான பெறுமதி ரூபா 18,520,206 ஆக காணப்பட்டு சொத்துக்களின் தேறிய புத்தகப் பெறுமதி ரூபா 594,554 மறை மீதியாக காணப்பட்டது.	இந்த மீதி 1996 ஆம் வருடத்தின் முன்னரிலிருந்து காணப்பட்டு வருவதுடன் இந்த மீதியை உறுதி செய்வதற்கு எழுத்து மூலமாக சான்றுகள் காணப்படவில்லை.	சொத்துக்களின் கிரயத்தை விஞ்சி பெறுமான தேய்வு மேற்கொள்ளப்பட்டதை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஐ)	சிலாபம் தோட்ட கம்பெனி 2019 ஆம் வருடத்திலிருந்து சபைக்கு சொந்தமான கட்டிடம் ஒன்றில் அலுவலகம் ஒன்று மற்றும்	2019 முதல் 2023 ஆம் ஆண்டு வரை சிலாபம் பெருந்தோட்ட கம்பெனியின் கீழ் மாடியில் நடாத்தப்பட்டு	சபையின் ஆதனங்களை பயன்படுத்தும் அனைத்து

	விற்பனை நிலையம் ஒன்றும் எவ்வித கொடுப்பனவும் மற்றும் ஒப்பந்தம் ஒன்றும் இல்லாமல் நடத்திச் செல்லப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் வருடத்தில் இருந்து 2024 ஆம் வருடம் வரையும் அரச மதிப்பீட்டின் பிரகாரம் கணப்பீடு செய்யப்பட்டிருந்த கிடைக்கப்பெற வேண்டிய குத்தகை வாடகையாக ரூபா 13,659,354 தொகை ஒன்று சபைக்கு கிடைக்கப்பெற வேண்டுமென அடையாளப் படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த தொகையை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வந்த அலுவலகம் மற்றும் விற்பனை நிலையம் தொடர்பாக இதுவரை ஒப்பந்தம் ஒன்றுக்கு முற்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக எழுத்து மூலமாக கணக்கு பிரிவு அறிவித்தல் ஒன்றை 2025 நவம்பர் 25 ஆம் தேதி பிரதி தலைவரின் ஊடாக உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டு கணக்கு பிரிவுக்கு பிரதி ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளதுடன் 2025 டிசம்பர் 05 ஆம் தேதி இதை கணக்கீடு மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தரப்பினர்களுடனும் குத்தகை ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்படுவது மற்றும் அதன் பிரகாரம் குத்தகை பணத்தை உரிய காலத்தில் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஒ)	லூல்கந்துர தோட்டத்திலே பொருத்துவதற்காக எரிபொருள் தாங்கி ஒன்றை கொள்வனவு செய்வதற்காக 2022 செப்டெம்பர் 28 திகதி கொடுக்கல் வாங்கல் தாரருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,614,000 முற்பணம் சபையின் நடைமுறை வேலை ஒன்றாக குறிப்பிடப்பட்டதன் காரணமாக நிதிக்கூற்றுகளில் நடைமுறை அல்லா சொத்துக்கள் அந்த அளவில் மிகை கணப்பீடு செய்யப்பட்டு இருந்ததுடன், 2026 ஜனவாரி 01 திகதி ஆகும் போதும், எரிபொருள் நிரப்பும் தாங்கி கொள்வனவு செய்து பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இந்த எரிபொருள் தாங்கி 2026 ஜனவரி 07 ஆம் திகதி குமாரவத்த தோட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதனால் இந்த லுள் கந்துற தோட்டத்தில் காணப்படுகின்ற நடைமுறை வேலையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ரூபா 1,614,000 தொகை குமாரவத்த தோட்டத்திற்கு மாற்றப்பட்டு 2026 ஆம் வருடத்தின் கணக்குகளுக்கு உட்படுத்தப்படுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	எரிபொருள் தாங்கியை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு சொத்துக்களாக கணக்குகளில் உட்படுத்தப்பட வேண்டும்.

1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

விடயம்	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா	தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் ரூபா	வேறுபாடு ரூபா	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
இலங்கை அரச பெருந் தோட்ட கூட்டுஸ்தாபனத்தினால்	97,709,342	117,039,582	19,330,240	இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தனத்திடமிருந்து தோட்ட	இலங்கை அரச பெருந் தோட்ட கூட்டுஸ்தாபனத்துடன்

கபைக்குகிடைக்கப்பெ பற வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதி		அதிகர சபைக்கு கிடைக்க பெற வேண்டிய கடன் மீதி ரூபா 119,318,456 வை பகுப்பாய்வு செய்து சபைக்கு லெஜர் கணக்கு பிரதி ஒன்று அனுப்பப்பட்ட போதிலும் தகவல்கள் போதுமான அளவு காணப்பப்படாததன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தகவல்களுடன் ஒப்பீடு செய்ய துடியவில்லை. அத்தோடு பெருந்தோட்ட கூட்டு தாபனத்திடமிருந்து கிடைக்கப் பெறவேண்டிய கடன் மீதி ரூபா 119,318,496 ஆக காணப்பட்ட போதிலும் பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்துக் கு செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 2,278,914 ஈடுசெய்ததன் காரணமாக மீதி ரூபா 117,039,582 ஆக காணப்பட்டது.	மீதிகளை ஒப்பிட்டு சரியான மீதி அடையாளப்படு த்தப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

1.5.4 தொங்கல் கணக்குகள்

விடயம்	தொகை ரூபா	தொங்கலில் உள்ள காலப்பகுதி	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான வியாபார மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய வற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா	1,863,756	28 வருடங்கள்	பிரதான அலுவலகத்தின் ரூபா 1,863,756 ஆன தொங்கல் கணக்கின் மீதி	தொங்கள் கணக்குகள் மீதிக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

1,863,756 ஆன பழைய தொங்கள் கணக்குகள் மீதிக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	1996 ஆம் வருடத்திற்கு முன்னரான மீதி ஒன்றாக காணப்படுவதுடன் இது தொடர்பாக தகவல்களை தேடிப் பெற்றுக் கொள்வதற்கு முடியாது உள்ளதனால் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு முடியாது உள்ளது.	சரியாக அடையாளம் காணப்பட்டு சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5.5 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
சபையின் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான அலுவலகத்தின் காணிகள் கட்டிடங்கள் மற்றும் தோட்டங்களின் கட்டிடங்கள், ஏனைய மீதிகள், நீர் வளங்கள் செயல்திட்டத்தின் மீதி எனும் பௌதீக ரீதியாக காணப்படும் ரூபா 1,570,107,697 ஆன ஆதனங்களின் சட்டபூர்வ உரிமையை உறுதி செய்வதற்கான காணிகளின் உறுதி பத்திரங்கள் மற்றும் தளகோளங்கள் காணப்படவில்லை. 2008 ஆம் வருடத்திற்கு பிறகு பெறுமதிகள் மீள்மதிப்பீடுகள் செய்யப்படாததால், காணிகள் மற்றும் கட்டிடங்களின் நியாயமான பெறுமதிகள் கணக்குகளின் ஊடாக பிரதிபலிக்கவில்லை.	பிரதான அலுவலகத்தின் காணி மற்றும் கட்டிடங்களாக குறிப்பிடப்பட்டுள்ள பிரதான அலுவலகத்திற்கு உரித்தான காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 1,543,300,120 வில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 1,489,375,963 தொடர்பாக நிறுவனத்தில் உள்ள விபரமான தகவல்கள் 2020 வரைபு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கு விடையாக வழங்கப்பட்டுள்ளது. பிரதான அலுவலகம் மற்றும் தோட்டத்தின் கட்டிடங்களும் இதுவரை மதிப்பிடப்பட்டு பெறுமதிகள் பெற்றுக் கொள்ளப்படாதிருப்பதுடன் இந்த கட்டிடங்களின் சதுர அடி அளவுகள், பொறியியலாளர் திட்டங்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு முடியாது உள்ளது. அத்தோடு இந்த பெறுமதியினுள் ரூபா 39,770,818 மீதி புத்தகத்தில் தொடர்ந்தும் காணப்பட்டு வரும் மீதி ஒன்றாகும்.	காணிகள் கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் உரிமை மற்றும் இருப்பை உறுதிப்படுத்துவதற்காக போதுமான அளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டு சொத்துக்கள் மீண்டும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

1.5.6 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
தொடர்ந்து நட்டமீட்டுவதன் மீது மற்றும் சபையின் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் தற்போதைய மதிப்பீட்டிக்கு இல்லாததால் 2024 திசெம்பர் 31 திகதி தேறிய சொத்துக்கள் மற்றும் தொழிற்படு மூலதனம் முறையே ரூபா 1,343,526,831 மற்றும் ரூபா 2,212,614,116 ஆன மறை பெறுமானத்தை எடுத்திருந்ததுடன் அத்திகதிக்கு செலுத்தப்பட இருந்த நியதிச் சட்டகொடுப்பனவு ரூபா 2,223,880,147 ஆகவிருந்தது. இந்த கடப்பாட்டை தீர்க்க போதிய முதலீட்டையும் செய்திருக்காததுடன் தீர்க்கப்படவுள்ள வங்கி கடன் மீதி ரூபா 126,487,116 ஆகவிருந்தது. இதன் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 25 பந்தியின் பிரகாரம் சபையின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக பொருண்மையான நிச்சமற்ற தன்மை நிதிக்கூற்றுக்களின் காணப்படுவது அவதானிக்கப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 2.4 இன் மூலம் சபையின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்த மறுசீரமைக்கப்பும் 2026 மார்ச் 19 திகதி வரையும் மேற்கொண்டிருக்கவில்லை.	சபையிக்கு சொந்தமான காணி கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் உரியவாறு மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அந்த பெறுமதிகள் புத்தகங்களுக்கு எடுக்கப்படாததற்கு காரணம் நிறுவனத்தின் தொடர்ந்தும் காணப்பட்டு வரும் செயற்பாட்டு மூலதன பற்றாக்குறை ஆகும். இதன் காரணமாகவே, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நியதிச்சட்ட கொடுப்பனவுகளை செலுத்த முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் மேலும், நிலுவையில் உள்ள இந்தச் சட்டரீதியான கொடுப்பனவுகள், ஆண்டுதோறும் அவ்வப்போது பொதுக் திறைசேறியிலிருந்து பெறப்பட்ட பணத்திலிருந்து செலுத்தப்பட்டு வருகின்றன. 2024 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு இல. 2.4 இன் காட்டப்பட்டுள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைகள், ஒவ்வொரு அரசியல் ஆட்சி மாற்றத்தின் போதும் உரிய சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை அது நடைபெறவில்லை.	சபையிடம் காணப்படுகின்ற காணிகள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை முறையாக மீள் மதிப்பீடு ஒன்று மேற்கொண்டு அந்த பெறுமானங்கள் புத்தகங்களுக்கு உட்படுத்தப்பட்டு நிறுவனத்தில் தொடர்ந்தும் காணப்பட்டு வருகின்ற செயற்பாட்டு மூலதன பற்றாக்குறைகளை நீக்குவதற்கு முறையான உபாய வழி ஒன்றை தயாரித்துக் கொள்வதற்கு பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் சபையின் மறு சீரமைப்பொன்றை மேற்கொள்ள வேண்டும்.

1.5.7 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

	கிடைக்கப்பெற்ற விடயம்	தொகை	இல்லாத சான்று	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
		ரூபா			
(அ)	நுகர்வு பிரிவின் பழைய கடன் பட்டோர் மீதிகள், மொன்த கிறிஸ்தோ	95,031,236	மீதி உறுதிப்படுத்தல்கள், கடன் பட்டோர் கால பகுப்பாய்வு,	இந்த மதிப்புகள் முந்தைய ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களில்	மீதி உறுதிப்படுத்தப்பட்டு நிலுவை மீதி அறவிடப்படுதவற்கு மற்றும்

	தோட்டத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி, கிடைக்கப் பெறவேண்டிய தடுத்து வைக்கப்பட்டுள்ள வரி மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, வியாபார கிடைக்கப் பெற வேண்டியவற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ள சீராக்க மீதி		இருப்பை கணிப்பிடும் அறிக்கை, விபரமான உபபதிவேடு மற்றும் கிடைக்கப் பெற வேண்டிய மீதியை அறவிடுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	முன்னோக்கி எடுத்துச் செல்லப்படுகின்றதுடன் ஒவ்வொரு காலகட்டத்திற்கும் தேவையான தகவல்கள் தேடப்பட்டு மீதிகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	அடையாளம் காணமுடியாத மீதிக்காக தகுந்த மற்றும் அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	பொறுப்பளிக்கப்பட்ட ஏனைய உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் மீதி	38,912,523	பௌதீக உறுதிப்பாட்டு அறிக்கைகள், மரங்களின் புள்ளி விபர அறிக்கைகள் மற்றும் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்குரிய அறிக்கைகள்.	இந்த பெறுமதியினுள் ரூபா 17,925,652 ஆன மீதி 1996 ஆம் வருடத்திற்கு முன்பு இருந்து காணப்பட்டு வருகின்ற மீதி ஒன்றாக உள்ளதுடன் எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூபா 7,859,380ஆன மீதி பௌதீக ரீதியாக காணப்படாததுடன் ரூபா 13,127,491 ஆன முதிர்ச்சி அடைந்த இறப்பர் பயிர் சைகைக்கு மாற்றுவதற்கு	சொத்துக்களின் இருப்பும் மதிப்பும் சரியாக கண்டறியப்பட்டு, சரியாக கணக்கிடப்பட வேண்டும்.

				நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(இ)	வரையறுக்கப்பட்ட இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனம், தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய மீதி, மகாவலி வீட்டு செயல்திட்டத்திற்காக செலுத்தப்பட வேண்டிய மீதி, குத்தகை சொத்துக்கு எதிராக வைப்பு, செலுத்தப்பட வேண்டிய வரி பொறுப்புக்கள், தேசத்தை கட்டியெழுப்பும் வரி, பொருளாதார சேவை கட்டணம், உழைக்கும் போது செலுத்தும் வரி மற்றும் செலுத்த வேண்டிய பதவியணியினர் சம்பளம் மற்றும் வேதனங்களின் மீதி, வங்கி கடன் தொகை மீதி, ஏனைய வைப்புக்கள், ஏனைய கடன் கொடுத்தோர்களின் மீதி	526,532,378	மீதி உறுதிப்படுத்தல் பதிவேடு, கால பகுப்பாய்வு, நிறைவு செய்யப்பட்ட வேலை அறிக்கை மற்றும் சான்றுறுதி படுத்தப்பட்ட சிட்டைகள், வைப்புக்களுக்கு உரிய பற்றுச் சீட்டுக்கள், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற சலுகைகளின் கால வரையறைகள், காலத்திற்குரிய கொடுப்பனவுகள் தொடர்பான வவுச்சர்கள், பணிப்பாளர் சபை அங்கீகாரம், கடன் வழங்கப்பட்ட திகதிகள், கடன் உடன்படிக்கைகள், கடன் தொகை, தவணையுடன், வட்டி மற்றும் கடன் செலுத்துதல்கள் விபரங்கள்.	இந்த மீதி 01/2021 சுற்று நிருபத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குத்தகைதாரர்களின் கணக்குகளில் காணப்படுகின்ற பிழையின் காரணமாக செலவு மீதி ஒன்று காட்டப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த கணக்குகள் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும்.	சரி பார்க்க முடியாத மீதிகள் உரிய சுற்று நிருபத்தின் பிரகாரம் கணக்குகளில் இருந்து நீக்குவதற்கும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளில் இடம்பெற்றுள்ள பிழைகளை சீர் செய்து சரியான பெறுமதிக்கு கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	மாற்றம் அடையாத பழைய பொது ஒதுக்க மீதி, பெருந்தோட்ட அபிவிருத்தி செயற்திட்டம்	295,796,203	நன்கொடை கிடைக்கப்பெற்ற வருடம், வழங்கப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் பயன்பாடுகள் மற்றும் அதனை வழங்கிய	இந்த மீதி 2016 ஆம் வருடத்திற்கு முன்பில் இருந்து காணப்பட்டு வருகின்ற மீதி ஒன்று என்பதுடன் நிறுவனத்திடம் இந்த மீதி	பழைய மீதியை சரி பார்ப்பதோடு அவ்வாறு செய்ய முடியாத மீதிகள் உரிய சுற்று நிருபத்தின் பிரகாரம் கணக்குகளில் இருந்து

	தரப்பினர், நிறைவு செய்யப்பட்ட வேலை அறிக்கைகள், சான்றுறுதி படுத்தப்பட்ட சிட்டைகள், நிதியங்கள் கிடைக்கப்பெற்ற மூலாதாரம் மற்றும் அவை கணக்கீடு செய்யப்படுவதற்கான உரிய கொள்கைகள் மற்றும் பெறப்பட்ட அங்கீகாரம்	தொடர்பான தகவல்கள் காணப்படவில்லை.	நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
சபையின் தோட்டங்களுக்குரியதாக, 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 96,908,449 வியாபார ஏனைய கடன் பட்டோர் காலப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம், 4-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேலான கடன் பட்டோர் மீதி முறையே ரூபா 9,233,006 மற்றும் ரூபா 53,749,223 ஆகவும், தலைமை அலுவலகத்தில் உள்ள ரூபா 496,460,528 வியாபார பெற வேண்டிய மீதிக்குரியதாக 3-6 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பெற வேண்டிய மீதி ரூபா 59,346,049 தொகை ஆகவும், 6 ஆண்டுகளுக்கு மேலான பெற வேண்டிய மீதி ரூபா 68,945,867 ஆகவும், நுகர்வு பிரிவில் 5 ஆண்டுகளை விஞ்சிய கடன் தொகை ரூபா 11,026,230 ஆகவும் அவதானிக்கப்பட்ட துடன் சபையினால் இந்த மீதிகளை	இந்த கிடைக்கப்பெற வேண்டிய கணக்குகளில் உள்ள மீதிகள் சரி அல்லாமைக்கு காரணமாக காணப்பட்ட குத்தகை ஒப்பந்தங்களின் பிழைகள், குத்தகைதாரர்களுக்கு மற்றும் கணக்கு பிரிவிற்கு கிரமமாக மாதாந்தம்/வருடாந்தம் இன் வொயிஸ் பத்திரம் விநியோகிக்காமை, குத்தகை ஒப்பந்தங்களில் இடம்பெறுகின்ற மாற்றங்கள் தொடர்பாக கணக்குப் பிரிவுக்கு உரிய பிரிவுகளினுள் எழுத்து மூலமாக அறிவிக்கப்படாமை, குத்தகை ஒப்பந்தங்களின் பிறவி ஒன்றை பெற்றுக் கொடுக்காமை என்பவை ஆகும். 2018 ஆம் வருடத்திற்கு உரிய ரூபா 5,904,575 கடன் மீதியை இலங்கை இராணுவத்திடம் இருந்து கிடைக்கப் பெறாது என்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி அந்த பெறுமதிகள் புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.	நிலுவை மீதி அறவிடப்பட வேண்டிய நிறுவனங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அறவிட்டுக் கொள்வதற்கு மற்றும் ஐயக்கடன் மீதி தொடர்பாக ஏற்பாடுகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அறவிடுவதற்காக வினைத்திறனான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.6.2 செலுத்த வேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
சபையின் தோட்டங்களுக்கு உரியதான 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 116,370,690 ஆன கடன் கொடுத்தோர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 04-05 வருடங்களுக்கு இடையில் ரூபா 13,055,692 மற்றும் 05 வருடங்களை மிஞ்சிய ரூபா 73,408,101 பிரதான அலுவலகத்தின் ரூபா 106,220,009 ஆன வியாபார கடன் கொடுத்தோர் மீதியினுள் 01 - 03 வருடங்களுக்கு இடையில் ரூபா 9,703,150 ஆன கடன் கொடுத்தோர் மீதியும் 03-06 வருடங் களுக்கு இடையிப்பட்ட ரூபா 10,852,582கடன் கொடுத்தோர் மீதியொன்றும், 06 வருடங்களை மிஞ்சிய ரூபா 73,745,425 ஆன மீதியொன்றும் காணப்பட்டது.இந்த மீதியினுல் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 15,437,483 ஆன பெருந் தோட்ட மானவ அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்திற்குரிய மீதி மற்றும் ரூபா 62,198,341 ஆன வீத வரி கட்டணங்கள் ஆகிய மீதிகள் காணப்பட்டதுடன் அவற்றை தீர்த்து வைப்பதற்காக சபை நடவடிக்கை மேற்கொண்டு இருக்கவில்லை.	தோட்டங்களின் கடன் கொடுத்தோர் மீதியை உண்மையாக காணப்படுகின்றதா என்பதை தேடிப் பார்த்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளுதல் மற்றும் நிறுவனத்தின் நிதி நிலைமை க்கு ஏற்ப கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தில் காணப்படுகின்ற உக்கிரமான செயற்பாட்டு மூலதன நிதி பற்றாக்குறை காரணமாக இந்த கடன் கொடுத்தோருக்கு பணத்தை செலுத்துதல் தாமதமாகியுள்ளதுடன் நிதி காணப்படுகின்ற அடிப்படையில் தற்போது இந்த மீதிகள் செலுத்தப்பட்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கடன் கொடுத்தோர் மீதியை உறுதி செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் உடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1978 திசெம்பர் 19 ஆம் திகதியஇலக்கம் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை	சபையின் தலைமை அலுவலகம் மற்றும் தோட்டத் தொகுதிகளுக்கு சொந்தமாக காணப்படும் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண மீதிகள் தொடர்பாக சொத்துக்களின் வகை, கொள்வனவு செய்த பெறுமதி மற்றும் திகதி வாகனங்கள் அப்புறப்படுத்தல், வருடாந்தம் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் அகற்றுதல்கள், மாற்றுதல்கள் மற்றும் ஒவ்வொரு சொத்துக்களில் வெவ்வேறாக இனங்காணக் கூடியவாறு குறிப்பிட்ட தகவல்களை அடக்கிய முறையாக தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று சபையினால் பேணிச் சென்றிருக்கவில்லை	கணக்கு தேவைப்பாடுகளுக்காக நிறுவனத்தினால் தோட்டத்திற்காக மற்றும் பிரதான அலுவலகத்திற்காக வெவ்வேறாக நிலையான சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் முறையே 1996 ஆம் வருடம் மற்றும் 2008 ஆம் வருடங்களிலிருந்து பதிவேடு ஒன்று பேணப்பட்டு வருவதுடன் முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டு வருதல் இடம்பெற்றிருக்கவில்லை. எதிர்காலத்தில் சரியான முறையில் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்றை பேணப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும்.
(ஆ)	1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய	2011 ஆண்டு முதல் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய	நிறுவனத்தில் காணப்பட்ட உக்கிரமான செயற்பாட்டு மூலதன நிதி பற்றாக்குறையின் காரணமாக 2002ஆம்	சட்டத்தின் பிரகாரம் உரிய திகதியில் சட்டபூர்வ கொடுப்பணவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவு.	ரூபா 34,002,171 ஆன பங்களிப்பு தொகையை செலுத்தியிருக்காத துடன் மீளாய்வாண்டு இறுதி வரை நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 8,306,083 ஆன செலுத்த வேண்டிய மிகை மீதியொன்றும் காணப்பட்டது.	வருடத்தில் இருந்து EPF/ETF தொடர்ச்சியாக செலுத்துவதற்கு முடியாது போயிருந்ததுடன், நிதி அமைச்சின் ஒரு சில வருடங்களில் நிலுவை சட்டபூர்வ பணத்தை செலுத்துவதற்காக நிதியை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அப்பனத்தில் இருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் தற்போது செலுத்தப்பட வேண்டிய அனைத்து EPF, ETF பணத்தையும் ஒன்றாக செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	
(இ)	1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுகள் சட்டத்தின் ii ஆவது தொகுதியின் 5(1) உப பிரிவு	ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்ற அல்லது மரணித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டிய போதும், மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 811,037,849 ஆன செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதி மற்றும் ரூபா 279,858,224 ஆன செலுத்த வேண்டிய மிகை அறவீட்டு மீதியும் காணப்பட்டது.	தொடர்ந்தும் நிறுவனத்தில் காணப்படுகின்ற செயற்பாட்டு மூலதன நிதி பற்றாக்குறையின் காரணமாக நிறுவனத்தின் ஊழியர் பணிக்கொடை தொகையை முறையாக செலுத்துவதற்கு முடியாது போயிருந்தது. அனைத்து பணிக்கொடை தொகையையும் ஒன்றாக செலுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடை உரிய காலத்தில் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	1998 இன் 15 ஆம் இலக்க திருத்தப்பட்ட ஊழியர் சேமலாப	செலுத்த வேண்டிய சேமலாபமாக ரூபா 834,301,079 தொகையும் தோட்ட	நிறுவனத்தில் காணப்பட்ட உக்கிரமான செயற்பாட்டு மூலதன	சட்டத்தின் பிரகாரம் உரிய திகதியில் சட்டபூர்வ கொடுப்பணவுகள்

	நிதிச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு	பதவியணியினர் சேமலாப சங்கத்திற்கு (ESPS) மற்றும் இலங்கை பெருந்தோட்டதாரர்களின் சேமலாப சங்கத்திற்கு (CPPS) ரூபா 163,518,427 தொகை நிலுவை மீதியொன்றும் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதி உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மேற்குறித்த நிதியத்திற்காக ரூபா 90,272,881 தொகை செலுத்த வேண்டிய மிகை கட்டணத்தையும் செலுத்தியிருக்கவில்லை.	நிதி பற்றாக்குறையின் காரணமாக 2002 ஆம் வருடத்தில் இருந்து EPF/ETF தொடர்ந்து கொடுப்பனவுகளை செலுத்த முடியாது போயிருந்தது. 2023 ஜூலை மாதத்தில் இருந்து தற்போது சட்டபூர்வமான கொடுப்பனவுகள் நிறுவனத்தின் பணத்திலிருந்து கிரமமாக செலுத்தப்பட்டு வருகின்றது.	மேற்கொள்ளப்பட வேண்டும்.
(உ)	2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறை வரி சட்டத்தின் 93 ஆவது பிரிவு	2023/2024 மதிப்பீட்டு ஆண்டிற்குரிய வருமான வரி அறிக்கை 2026 ஜனவரி 01 திகதி வரையிலும் சமர்ப்பித்திருக்கவில்லை.	நிறுவனத்தின் நிதிக்கூற்றை சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக வருமானங்கள் அறிக்கை வருமான வரி திணைக்களத்திற்கு அனுப்புதல் தாமதமாக இருந்தது. வருமான வரி திணைக்களத்துக்கு கணக்காய்வு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் இதற்கு காரணமாக இருந்தது.	சட்டத்தின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருடத்துக்குரிய வருமான வரி அறிக்கைகள் கையளித்து வரியை செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஊ)	2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப் பட்டிருந்த செயற்பாட்டு	நுகர்வு பிரிவின் 05 வருடங்களை விஞ்சிய கடன் மீதி ரூபா 16,590,553 இல் இராணுவத்திடம் இருந்து அறவிடப்பட வேண்டி காணப்பட்ட ரூபா 5,904,575 மீதி ஒன்று	இந்த நுகர்வு பிரிவின் 2018 ஆம் வருடத்திற்கு உரிய ரூபா 6,645,190 கடன் மீதியினுள் உள்ள ரூபா 5,904,575 மீதி இலங்கை இராணுவத்திடம் இருந்து கிடைக்கப் பெறாது என்பதாக உறுதிப்படுத்தப்பட்டதுட	சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய நடைமுறையை பின்பற்றி கடன் மீதிகளை நீக்கப்பட வேண்டும்.

கை நூலின் 6.9 ஆம் பந்தி	புத்தகங்களில் நீக்குவதற்கு உரிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் உள்ளடங்களாக நடவடிக்கை எடுக்கப்படாமல் நிதிக் கூற்றுக்களில் இருந்து நீக்கப்பட்டு இருந்தது.	ன் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி இந்த பெறுமதி புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 229,233,137 ஆன நட்டமாக காணப்பட்டதுடன் அதனோடு நேரொத்த கடந்த வருடத்தின் நட்டம் ரூபா 147,859,712 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 81,373,425 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த நட்டத்தின் அதிகரிப்புக்கு சபையின் தேயிலை, இறப்பர் மற்றும் ஏனைய பயிர் செய்கைக்குரிய விற்பனை கிரயம் ரூபா 320,113,670 இனால் அதிகரித்தமையும், நிர்வாக மற்றும் பதவியணியினரின் கிரயம் ஒட்டுமொத்தமாக ரூபா 35,442,170 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் தேயிலை கொழுந்து விற்பனையினால் கிடைத்த வருமானம் 2023 அண்டிற்கு ஒப்பாக 2024ஆம் ஆண்டில் 6.5 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், இறப்பர் பயிர்களிலிருந்து கிடைத்த வருமானம் 2023 அண்டிற்கு ஒப்பாக 2024 ஆம் ஆண்டில் 42 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதனோடு, 2023 அண்டிற்கு ஒப்பாக 2024 ஆம் ஆண்டில் தேயிலை கொழுந்து மற்றும் இறப்பர் உற்பத்திற்குரிய கிரயம் முறையே 22 சதவீதத்தினால் மற்றும் 24.5 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

2.3 விகிதப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டில் மற்றும் கடந்த ஆண்டில் நடைமுறை விகிதம் 0.37:1 மற்றும் 0.35:1 ஆனது.
- மீளாய்வாண்டில் மற்றும் கடந்த ஆண்டில் சொத்து விரைவு விகிதம் 0.33:1 மற்றும் 0.31:1 ஆனது.
- மீளாய்வாண்டில் மொத்த நட்ட விகிதம் 13.5 சதவீதம் அனதுடன், கடந்த அண்டில் அவ் விகிதம் 3 சதவீதமானது.

- மீளாய்வாண்டில் தேறிய நட்ட விகிதம் 16 சதவீதமானதுடன் கடந்த ஆண்டின் போது தேறிய நட்ட விகிதம் 11.6 சதவீதமானது.

சபையின் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் மேற்குறிப்பிடப்பட்ட விகிதங்கள் பரீட்சிப்பின் போது காணப்படும் நடைமுறை சொத்துக்களினால் அதன் நடைமுறை பொறுப்புக்களை தீர்க்கும் இயலுமை இல்லை எனவும் மற்றும் நிறுவனத்தின் உரிமை மூலதனத்தை விஞ்சிய கடன் மூலதனம் காணப்படுவதோடு, நிறுவனத்தின் காணப்படும் நிதி நெருக்கடி மற்றும் தொடர்ந்தியங்கும் அபாயம் தொடர்பாக கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1972 இன் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரகாரம், சபை நிறுவப்பட்ட குறிக்கோளின் படி விவசாயம், உற்பத்தி, தோட்ட முகாமைத்துவம், வர்த்தகம், நிதி மற்றும் செயற்பாடு ஆகிய துறைகளுக்குரிய நிறுவப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் கருமங்கள் ஆக்கபூர்வமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு சபைக்கு முடியாமல் இருந்தது. மேலும், சபையின் குறிக்கோளின் படி சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த விவசாயம் சார் மற்றும் தோட்ட காணிகளின் ஆக்கபூர்வ தன்மையை உச்சமட்டத்தில் அதிகரிப்பதற்கு முறையான திட்டங்கள் தயாரிப்பதற்கு முறையான நடவடிக்கை எடுத்திருக்காததுடன், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொகுதிகளில் முறையான முகாமைத்துவத்துடன் இலாபகரத் தன்மையுடன் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இணங்குகின்றேன்.	சபைக்கு பொறுப்பு அளிக்கப்பட்டுள்ள தோட்டக் காணிகளின் வினைத்திறனை உச்ச மட்டத்தில் உயர்த்திக் கொள்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தேயிலை மற்றும் இறப்பர் தோட்ட முகாமைத்துவம் ஒன்றுடன் பேணப்பட்டு வர வேண்டும்.
(ஆ)	நாகஸ்தென்ன மற்றும் கந்தல் ஒய தோட்டங்களில் முறையே ரூபா 1,539,546 மற்றும் ரூபா 1,256,046 ஆன பணத் திருட்டு இடம்பெற்று சுமார் 13 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு தொடர்பில் தற்போதைய நிலைமையை கண்டறிந்திருக்காததுடன், பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு நட்டங்களை அறவீடு செய்வதற்கும்	கண்டி உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகின்றது. 2025 டிசம்பர் 11 ஆம் திகதி மீண்டும் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் நட்டத்தை அறவிட்டுக் கொள்வதற்கு முடியாது உள்ளத்துடன் எதிர்காலத்தில்	தாக்கல் செய்துள்ள வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் நட்டத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(இ)	சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஹெக்ரேயர் 92.84 அளவுடைய காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்கு 2019 ஆம் வருடத்தினுள் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் 19 குத்தகைதாரர்களுக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக 30 வருட கால எல்லை ஒன்றுக்காக காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மேற்குறித்த குத்தகை ஒப்பந்தங்கள் 2021 ஜூலை 13 ஆம் தேதி இரத்து செய்யப்பட்டிருந்தது. மீண்டும் காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் ஒன்று மற்றும் புதிய ஒப்பந்தம் ஒன்று கைச் சாத்திடப்படாமல் 13 குத்தகைதாரர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றுள் 07 குத்தகைதாரர்களுக்கு 28.29 ஹெக்ரேயர் உடைமை பொறுப்பளிக்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொண்டு குத்தகையை அறவிடப்படாமல் ஒரு ஏக்கருக்காக மாதம் ரூபா 1000 க்கு குறைவான குத்தகை பெறுமதி ஒன்று அறவிடப்பட்டிருந்தது. அத்தோடு குத்தகை ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் 10 குத்தகைதாரர்களுக்கு குத்தகை வழங்கப்பட்ட தினத்தில் இருந்து அறவிடப்பட வேண்டி இருந்த ரூபா 4,836,251 ஆன குத்தகை வாடகை பெறுமதில் 2024 டிசம்பர் 31 ஆம் தேதியாகும் போது ரூபா 2,691,292 ஆன	இந்த இடங்களை விடுவித்துக் கொள்ளுதல் தொடர்பாக 2019 ஆம் வருடத்தில் அமைச்சின் கணக்காய்வு பிரிவினால் இந்த செயல்திட்டம் தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் அடிப்படையில் பணிப்பாளர் சபையினால் 2021 ஜூன் மாதம் 13 ஆம் தேதி இந்த செயல் திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் மெற்குரித்த செயல் திட்டத்தின் கீழ் குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த மற்றும் பிரச்சினை இல்லாத அனுபவிக்க கூடிய காணிகள் பகுதி இந்த செயல் திட்டத்தின் கீழே வழங்குவதற்கு பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்திருந்தார். மேலும் மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு குத்தகை பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு மற்றும் நிலுவை குத்தகை பணத்தை அறவிட்டு கொள்வதற்கும் குத்தகைதாரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	ஆரம்ப குத்தகை ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்ட பின்னர் மீண்டும் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் புதிய குத்தகை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட வேண்டியத்துடன் புதிய மதிப்பீட்டின் ஊடாக குத்தகை பணம் அறவிட்டுக் கொள்வதற்கு மற்றும் நிலுவை குத்தகை பணத்தை அறவிட்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குத்தகை பெறுமதி ஒன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
சபைக்கு உடன்படிக்கைகள் ஊடாக பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஹெக்ரேயர் 1785.10 ஆன கானிகளில் 37 தோட்டங்களுக்குரிய ஹெக்ரேயர் 1,068.24 குத்தகைக்கு வழங்கப்பட்டு வருமானம் ஈட்டுவதற்கு அல்லது பயனுள்ள வேலைகளில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சபைக்கு உரித்தான குத்தகைக்கு வழங்குவதற்கு உள்ள காணிகள் 2019 ஆம் வருடத்தில் விசேட செயல்திட்ட முன்மொழிவு முறைமையின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் அடிப்படையில் இந்த செயல் திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது 2022.02.06 ஆம் தேதி காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்கு முதலீட்டாளர்களை தெரிவு செய்யும் விருப்பத்தின் அடிப்படையில் கோரப்பட்டு இருந்த விண்ணப்பங்களின் பிரகாரம் 07 காணிகள் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அமைசசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட குறை பயன்பாட்டு காணிகளை நீக்குதல் செயல் திட்டத்தின் கீழ் இந்த காணிகளும் குத்தகை வழங்குவதற்கு இருந்தது. பின்னர் 20 ஹெக்ரேயருக்கு குறைவான காணிகள் சபையின் ஊடாக குத்தகை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. பின்னர் 2025.01.29 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக இந்த காணிகள் அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்கிட்டத்தின் கீழ் நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.	பொறுப்பளிக்கப்பட்டு இருந்த காணிகளில் இருந்து வருமானங்களை ஈட்டிக் கொள்வதற்கு அல்லது, ஆக்கபூர்வமான பணிகளுக்காக உபயோகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.3.1 (ஆ) இன் பிரகாரம் மொத்தக் கிரய	இந்த வாகனம் 2023 செப்டம்பர் 04 ஆம் தேதி, 2024 ஜுன் 08 மற்றும் 2024 ஜுலை 19 ஆகிய	திருத்தத்திற்காக மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு

மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் கூறு விலை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 32 ஸ்ரீ 4264 உடைய ஜீப் வாகனம் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய 11 உதிரி பாகங்களை அடையாளம் கண்டு இருந்ததுடன் மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்படாமல் கூறு விலை ஒன்று மேற்கொள்ளப்பட்டு வாகனத்தின் இஞ்சின் மற்றும் இன்ஜெக்டர் பம்பி மாத்திரம் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு உதிரி பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 1,082,820 செலவிடப்பட்டு 2024 ஆம் வருட இறுதியாகும் போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத்தோடு இஞ்சின் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் நீக்கப்பட்ட உதிரி பாகங்கள் களஞ்சியத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட ஜீப் வாகனம் பிரதான அலுவலகத்திற்கு 2025 பிப்ரவரி 17 ஆம் தேதி வழங்கப்பட்டிருந்ததுடன் 2026 மார்ச் 27 ஆம் தேதி ஆகும் போது ஒரு வருடத்தை விட அதிக காலம் ஒன்று விளைவற்று காணப்பட்டது.

கால எல்லையின் போது 03 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அதற்காக இலங்கை போக்குவரத்து சபையின் பொறியியலாளர்களின் தொழில்நுட்ப அறிக்கை தரப்பட்டிருந்தது. தற்போது இந்த ஜீப் வாகனம் உக்கிய பாகங்கள் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு நிரப்பூச்சி இடுவதற்காக பிரதான அலுவலகத்திற்கு பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். நீக்கப்பட்ட பாகங்கள் களஞ்சிய சாலைக்கு ஒப்படைக்கப்பட்டதற்கான எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.